# அவைதீகத் தமிழ்ப் பண்பாடு ஒரு வரலாற்றாய்வு

**பேரா.தெ.வெற்றிச்செல்வன்**
**அயலகத் தமிழியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்,**
**தஞ்சாவூர். vetripoet@gmail.com**

44

**ஆய்வுச்சுருக்கம் :** அவைதீகத் தமிழ்ப் பண்பாடு என்பது, நிறுவனமயமாகி கெட்டிதட்டிப் போன மதவாத மாச்சரியங்களிலிருந்து விடுபட்டு, மதச்சார்பற்ற சனநாயகம் மற்றும் சமூக நீதி நோக்கிய பரிணாமப் பயணம்....எனும் நிலையில் ஆய்ந்து இங்கு கட்டுரைக்கப் படுகிறது.

Abstract: The Tamil culture of India is analyzed here as an evolutionary journey towards secular democracy and social justice, freed from institutionalized and entrenched religious practices.

**திறவுச்சொற்கள் :** வைதீகம், அவைதீகம், ஆசீவகம், மீமாம்சை, லோகாய்தம், பௌத்தம், சமணம், தாவோயிசம், சூஃபியிசம், வள்ளலாரியம், சித்தரியம்.

Keywords : Vaidheeka, Avaditheeka, Asivakaa, Mimamsaa, Lokayatha, Buddhism, Jainism, Taoism, Sufism, Vallalariyam, Siddharyam.

**முன்னுரை :**

இனக்குழுக்காலத் தொடர்ச்சியான சங்க இலக்கியங்கள், இயற்கைசார் ஆன்மீகம், சமயச்சார்பற்ற ஆன்மீகம், எனும் போக்குகளிலிருந்து பின் மாறி ஆசீவகம், மீமாம்சை, லோகாய்தம், பௌத்தம், சமணம் எனக் கோட்பாடுகள் பலவற்றின் தாக்கத்தோடு பயணப்பட்டது.

வைதீக இறுக்கமின்றி, தருக்கவியல் அடிப்படையிலும் நெகிழ்வுடனும் கல்வி வளர்ச்சி, சாதிப் படிநிலையின்மை, ஆகியவற்றுடனான தமிழ்ச்சமூகம் பின்னர் சைவ வைணவப் பூசல்கள், இந்துசமயக் கருத்துருவாக்கம், வருணச் சாதியச் சனாதனம் எனப் பல அடையாளங்களுடன் நிறுவன மயமாகியது

கழுவிலேற்றுதல் போன்ற சமயவாத நடவடிக்கைகள் மிகக்கடுமையானவை.இங்கு கழுவிலேற்றுதல் என்றால், மேலைத்தேயங்களில் மேசையில் படுக்க வைத்து, தேங்காய்த் துருவல் எந்திரம் போன்ற கருவி வைத்து வயிற்றைச் சுரண்டி சித்திரவதைக்கும் முறைகள்... சிலுவையிலறைதல், கல்லாலடித்து விரட்டுதல் போன்ற தண்டனைகள் இருந்திருக்கின்றன. ஒருபுறம் உண்மையைச் சொன்னால் இறைநம்பிக்கையை ஏற்றுக் கொள்ளாத பகுத்தறிவுவாதம், மனிதநேயத்துக்குக் குரல்கொடுத்ததோடு சடங்காச்சாரப் போலிமைகளில் வீணாக்காமல் மனிதவளத்தைச் செம்மையாக்கி, நாகரிகத்தை வளரச்செய்த வகையில், குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்தே வந்திருக்கிறது. இறை நம்பிக்கையின் பேராலும், மனிதர்களைச் சமுதாயமாக்க முயன்ற சமயத்தின் பேராலும்தான் போர்களும் அழித்தொழிப்புகளும் கணக்கற்று நிகழ்ந்தேறியிருக்கின்றன என்பது உலகவரலாறு. கொல்லாமையை வலியுறுத்திய பௌத்தமும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதை அண்மையில் ஈழத்தில் கண்டுவிட்டோம். எனவே, சமயங்கள் நிறுவனமயப்பட்டு கெட்டிதட்டி இறுகிய நிலையில் (Institutionalaised) தவிர்க்க இயலாமல் சீர்திருத்தவாதிகளின் வருகையைக் காண்கிறோம்.

வருணக் கொடுங்கோன்மை கொண்ட சாதிசமயச் சழக்குகள், மனுதர்மம், ஆகமம், சனாதனம் என்பனவற்றைப் பேணும் அதிகாரப்படி நிலைகளால் மனிதத்தைக் கூறுபோடுதல், வழிபாட்டுரிமை மறுப்பு, சிசுமணம், விதவைகளை ஈவிரக்கமின்றி மொட்டையடித்து வெள்ளையுடுத்தித் தனிமைப்படுத்துதல், உடன்கட்டை ஏறுதல், போன்ற கொடூரமான பெண்ணடிமைத்தனங்கள் மலிந்த வைதீகப்போக்குகள், சன நாயகவிரோதமானவை; மனித உரிமைமீறல்கள் கொண்டவை; சமூக நீதிக்குக் குந்தகம் விளைவிப்பவை.

இத்தகு சூழலில்தான் இக்கட்டுரை வாயிலாக, சங்ககாலத் தமிழ்ச்சமூகத்தின் அவைதீகத் தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றை நினைவு கூர்தலும் , பிற்காலத்திய மீட்டுருவாக்கம் செய்யும் முயற்சிகளும் குறித்துச் சிந்திக்கத் தலைப்படுகின்றோம்.

**முற்பொக்குப் பாய்ச்சல் கொண்ட அவைதீகச் சங்ககாலத் தமிழ்ச்சூழல்**

சங்ககாலத் தமிழ்ச்சமூகம், நிலம், நீர், காற்று, தீ, விசும்பு ஆகிய ஐம்பூதங்களின் மயக்கத்தாலேயே உலகம் தோன்றியது எனும் அறிவியல் மனப்பான்மையை அடிப்படையாகக் கொண்டது. ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என ஆதிப் பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்டது. ‘ஊழையும் உப்பக்கம் காண்பர்’ என்றது. ‘தெய்வத்தால் ஆகாது எனினும்’ முயற்சியின் வலிமை குறித்துச் சிந்தித்தது. சாதி இரண்டொழிய வேறில்லை என்றது. புன்னை மரத்தைத் தமக்கையாகப் பார்த்த அதிமானுடக் கண்ணோட்டமும் பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் பண்பாடும் கொண்டு சூழலியல் அறத்தை வளர்த்தெடுத்தது. (இதன் வளர் நீட்சியை, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் எனும் வள்ளலாரில் பார்க்கமுடியும்) சோதிடம் பாராமல், ஐயர் மந்திரம் ஓதாமல், அம்மி மிதித்து அருந்ததி பார்க்காமல், புதுமணற்பரப்பிய பந்தரில், முதுபெண்டிர் முன்னின்று நடத்த, நெல்லும் பிச்சிப்பூவும் தூவி வாழ்கென வாழ்த்தி, மறு உற்பத்திக்கான இடுப்பெலும்பை உறுதிப்படுத்தும் உளுந்துக்களியை திருமண விருந்தாயளித்து காந்தருவத் திருமணம் என்னும் திணைக்குடிகளிடையேயான காதல் திருமணத்தை வழமையாகக் கொண்டிருந்தது. தமிழ் மொழி சிந்துவெளி தொடங்கி இந்தியா முழுவதும் பரவியதோடு, தமிழ்ப்பண்பாடு, வேளாண் பண்பாட்டையும் நகர நாகரிகத்தையும் கொண்டு சிறந்து பொலிந்தது.

**பொய்யும் வழுவும் இடைபுகுந்த காலம் அவைதீகச் சிதைவும்**

“தமிழ்ச் சூழலில் சமண பௌத்தம் பரவலாகியிருந்த நிலையில், பல்லவர் காலத்தில் வைதீகம் எழுச்சியுற்றது. சைவமும் வேகம்கொண்டு வளர்ந்தது. பொருளாதார மாற்றம் சமய மாற்றத்துக்குத் துணைபோனது என்று காண்பது, வரலாற்றுப் பொருள்முதல்வாத நோக்காகும். விவசாய உற்பத்தி, நீர்நிலை வாய்ப்புகளால் மேம்படத் தொடங்கியது. தமிழ் நாட்டுப் பல்லவ மன்னர்கள், அமைச்சர்கள், நிலப்பிரபுக்களிடம் பணமும் பண்டங்களும் பெருகத்தொடங்கின. இந்த நிலையில் சமணமதத் துறவிகளின் பிரச்சாரமான ஒறுத்த வாழ்வுக் கொள்கை பலமிழந்தது. மேலும் விழாக்கள், திருமண / மரணச்சடங்கு முறைகள், விருந்துகளுக்கு சமணம் கட்டுப்பாடு விதித்திருந்தது. இச்சூழலில் இரண்டாவது நிலையிலிருந்த வைதீகச் சமயமும் பிராமணர்களும் ஆதிக்கம் பெறத்தொடங்கினர். சமணர்கள் விரட்டப்பட்டனர். சிவன் கோவில்கள் எழத்தொடங்கின. கோவில்களே நில

உற்பத்தியையும் பண்டங்களையும் அரசருக்கு வேண்டியபடிக் கையாளத்தொடங்கின. சமணத் துறவிகளும் அவர்களுக்கு ஆதரவு அளித்து வந்தவர்களும் மலைகளையும் காடுகளையும் நாடி ஓடிவிடநேர்ந்தது. சமணத்தின் நாத்திக நிலைக்கு ஒன்றே குலம் ஒருவனே தேவன் எனும் சைவமுழக்கம் முற்றுப்புள்ளி வைத்தது . இந்தச்சூழலில் சிந்தனையாளர்கள், புலவர்கள் புதிய வழிவகுத்தனர். சமணம், வைதீகம் இரண்டுக்கும் இடைப்பட்ட நிலை எடுத்தனர்." என்று, ஈழ எழுத்தாளர் செ.கணேசலிங்கனின் சித்தரியத் தோற்றம் குறித்த சித்திரம் இங்கு கவனிக்கத்தக்கது. கூடவே சூஃபியிசத்தோடு சித்தரியம் ஒத்திசைவதை கணேசலிங்கன் ஒப்பாய்கிறார். போலவே, கைலாசபதியும் சீன தாவோயிசத்தோடு சித்தரியத்தை ஒத்தும் உறழ்ந்தும் நோக்குகிறார்.

பின்னாளில் தாயுமானவர், இராமலிங்க வள்ளலார் புழங்கிய சமரசம் எனும் சொல்லாடல் மிக முக்கியமானது. காலனிய காலத்தில் வீச்சாகப் பரவிய கிறித்தவம் அனைவருக்கும் கல்வி, மேலாடை அணியும் உரிமை, வழிபாட்டில் சமத்துவம், வாழ்வாதாரத்துக்கான உதவிகள் என வளர்ந்ததன் தாக்கம், சைவ வைணவ மற்றும் பிற சமயங்களின் போக்குகளில், ஒரு சமரச ஏற்பாட்டை தவிர்க்கவியலாமல் விழைந்ததன் அடிப்படையில், சமரசச் சன்மார்க்க உருவாக்கத்தை இவ்விடத்தில் பொருத்திப் பார்க்கலாம். கெட்டிதட்டிப்போன நிறுவனமயப்பட்ட ஆன்மீகத்தை நெகிழ்த்த முயன்ற சமரசமே அது என வள்ளலாரியலை ஆயமுடியும்.

ஆக, சமணத்தின் செழுமைகளை உட்செரித்து, அதேவேளை தனக்கேற்றாற் போல தனதாக்கிக்கொண்டு வளரும் போக்கைப் பார்ப்பனியம் கொண்டுவந்தது. இங்கே ஒரு சமரசம் தேவைப்படவே அத்தளத்தை சித்தரியம் கட்டமைத்தது.வள்ளலாரியம் வளர்த்தெடுத்தது.

**சித்தரியப் புத்தாக்கமும் அவைதீக மறுமலர்ச்சியும்**

சித்தரியம் அத்தகையதொரு அவைதீகப் படிமலர்ச்சியைத் தந்தது. ஓகக்கலை, மருத்துவம், சனாதன இழிவகற்றல், தற்காப்புக்கலை, போன்ற பல செம்மாந்த பண்பாட்டுக் கொடைகளை உலகிற்கு வழங்கியதில் தமிழ்ச் சித்தர் மரபு குறிப்பிடத் தக்கது. தொல்காப்பியம் உலகத்தோற்றக் கதையை மிக முற்போக்காக ஐம்பூதங்களின் மயக்கம் என்று கணிக்கிறது. சித்த மருத்துவமும், நாடி பார்த்து ஐம்பூதங்களின் தாக்க மாறுபாடுகளால் நோய்வாய்ப்பட்ட நிலையைக் கணித்து, மருத்துவம் செய்யும் தொல்லறிவியலைப் பங்களித்திருக்கிறது. இது மிகவும் குறிப்பிடத்தக்கது.

சித்தரியத்தின் இலக்கியம் சார்ந்த, தத்துவம் சார்ந்த கொடை எனும்போது, மிக முக்கிய விடயங்கள், இன்று வணிகமயமாகியுள்ள சமய நிறுவனங்களின் சிண்டைப் பிடித்து உலுக்கும் கோட்பாடுகளை மையமாகக் கொண்டவை. அந்த வகையில் முற்போக்கானவை சித்தரியமும் வள்ளலாரியமும். வணிகத்தை வணிகம் செய்வதுகூட அல்ல, அறத்தை வணிகம் செய்வது என்பது (சங்க இலக்கியச் சொல்லாடல் கவனிக்க : அறவிலை வணிகம்) கொடூரமானது. அண்மைக்காலத்திய அட்சயதிருதியைக்கு நகை வாங்குதல், உடன்பிறந்தாளுக்கு பச்சைப் புடவைப் பரிசளிப்பு, அத்திவரதர் தரிசனம், தகடு மந்திரித்தல், சூனியம் வைத்தல், தற்காலச் சமூகத்தைக் கற்காலச் சமூகம் ஆக்குவதுபோல் ராசிக்கல் வணிகம், எனப் பலவாறு நம்பிக்கை எனும் பெயரில் மூட நம்பிக்கைகளைப் பரவலாக்கி, வணிகம் செய்வது நடந்து வருவதைக் கவனித்தால் யாரோ சிலர் கொழிக்க, இவற்றை

மூலதனமாக்கி, தயந்து கேட்பதைக்கூட தவிர்த்து மிரட்டி அச்சுறுத்தி செய்யப்படும் வணிகம் விறுவிறுப்படைந்து வருவதைப் பார்க்கலாம்.இந்தப் பின்னணிகளில் சிந்திக்கையில் சித்தரியம் எழுப்பும் வினாக்களும் முன்வைக்கும் தர்க்க நியாயங்களும் மிக மிக இன்றியமையாதன. கைலாசபதியின் சித்தர் தத்துவம் கட்டுரை இங்கு ஒப்பிடத்தக்கது.

“இடைக்காலச் சமுதாயம் வேதவாழ்க்கையை மூல ஆதாரமாய்க் கொண்டு வர்ணாசிரம தர்மத்தின் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்டு இருந்தது. வேத வழக்கோடு மாறுபடும் எதுவும் ஆக்ரோஷத்துடன் கண்டிக்கப்பட்டது. சித்தர்களோ அடிப்படையையே கோடரி கொண்டு வெட்டினர். சதுர்வேதம், அறுவகைச்சாத்திரம், பல தந்திரம், என வைதீகப் புராணிகங்கள் தொடங்கின. புராணங்களைச் சாற்றும் ஆகமம், விதம் விதமான நூல்களும் வீணான நூல்கள் என்று ஆடாய் பாம்பே எனப் பாம்பாட்டிச் சித்தர் பாடலில் புனிதமானது என்று போற்றுவனவற்றை வீணானவை என்று அடித்துக் கூறுகிறார். விக்கிரக வழிபாட்டு எதிர்ப்புக்கும் இதே சித்தரின் பாடலை உதாரணமாகக் காட்ட முடியும். சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்… சாதியாவது ஏதடா… என்கிற அசைக்க முடியாத உறுதிப்பாட்டுடன் தன்னம்பிக்கையுடனும் ஆழ்ந்த நம்பிக்கையுடனும் பாடினர், சித்தர். இவற்றையெல்லாம் நோக்கும்போது, சித்தர்கள் கிளர்ச்சியாளர்கள் Rebels என்றே கூறத்தோன்றுகிறது. சமயத்துறையில் அவர்கள் வழிகாட்டிய எதிர்ப்பு உண்மையில் சமூகத்துறையில் இருந்த முரண்பாட்டின் விளைவே ஆகும். உடலுக்கு உறுதியும் உறுதுணையும் அளிப்பதற்கு உலோகங்களையும் மூலிகைகளையும் நுணுகிஆராய்ந்தனர், சித்தர்கள். இதன் விளைவாகச் சித்தவைத்தியம் வளர்ந்தது. ரசாயனம், தாவர சாத்திரம், வைத்தியம், வானசாத்திரம், உடற்கூறு சாத்திரம் போன்ற பல அறிவியல் துறைகளில் எல்லாம், சித்தர் வாக்குகளே நமது மரபுமுறை விஞ்ஞானத்தில் சிறந்து விளங்குகின்றன” என்கிறார், கைலாசபதி.

**வைதீக மறுப்பும் சித்தரியமும் வள்ளலாரியமும்**

சமூகத்தில் கெட்டி தட்டி இறுகிய வைதீகத்தின் ஆணிவேரை அசைத்துப்பார்த்தது சித்தரியம் என்றால் அது மிகையான கூற்றாக இருக்க முடியாது. அந்த வகையில் பின்கண்ட பாடல் வரிகளை தரவுகளாகத் தொகுக்கலாம்.

- தத்துவக் குப்பையைத் தள்ளுங்கடி வேத
  சாத்திரப் பொத்தலை மூடுங்கடி (ஞானக் கும்மி 146)
  கோயிலாவ தேதடா குளங்களாவ தேதடா? (சிவவாக்கியர் : 32)
- பிறந்தபோது கோவணம் இலங்கு நூஉல் குடுமியும்
  பிறந்துடன் பிறந்ததோ பிறங்கு நூல்சடங்கெலாம் (சிவவாக்கியர் : 187)
- நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே
  சுற்றி வந்து முணமுணென்று சொல்லுமந்திரமேதடா
  நட்ட கல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில்.... (சிவவாக்கியர் :497)

இப்படியான சித்தரியச் சிந்தனைகளும் தருக்க நியாயங்களை முன்வைக்கும் விவாதத் தொனிகளும் ஆழமும் விரிவும் கொண்டவை.

**சாதி மத பேதம் மறுத்தல்**

சாதியச் சனாதன மறுப்பு மிகத் துலக்கமாக வெளிப்படும் சித்தர் பாடல்கள் குறிப்பிடத்தக்கவை.

- சாதி பேதம் இல்லை அகப்பேய் (அகப்பேய்ச் சித்தர் பாடல் எண் : 68)
- சாதிப்பிரிவினிலே தீயை மூட்டுவோம் (பாம்பாட்டிச்சித்தர் : 123)
- பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா (சிவவாக்கியர் : 37)

இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ
பறைச்சி போகம் வேறதோ பணத்தி போகம் வேறதோ
சாதியாவதேதடா ? (சிவவாக்கியர் : 44)

அறிவும் விஞ்ஞானமும் பகுத்தறிவு ஒளியும் பாய்ச்சுகின்ற அருட்பெரும்சோதி என்று அறைகூவலோடு சனாதனச் சழக்ககற்றிச் சமத்துவம் பாடிய வள்ளலாரியத்தில் சித்தரியப் பரிணாம வளர்ச்சியை இன்னும் கூர்மைப்படக் காணலாம். கண்மூடிப் பழக்கமெலாம் மண்மூடிப்போக என வைதீகவழக்கங்களை அறம்பாடுகிறார் வள்ளலார்.

சாதிமதம் சமயமெனும் சங்கடம் விட்டு அறியேன்
சாத்திரச் சேறாடுகின்ற சஞ்சலம் விட்டு அறியேன் ..............என்றும்
சாதி குலம் சமயம் எலாம் தவிர்த்தெனை மேல் ஏற்றி............என்றும்
சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே
ஆதியிலே அபிமானித் தலைகின்ற உலகீர்
அலைந்தலைந்து வீணே நீர் அழிதல் அழகலவே...................என்றும்
மதமான பேய் பிடியாதிருக்கவேண்டும் ...................என்றும்

பாடிய வள்ளலார் வைதீகத்தின் மீது கடும் விமர்சனங்களை முன்வைப்பதை இங்கு பொருத்திப் பார்க்கலாம்.

**இளமை நிலையாமையும் உடலரசியலும்**

இளமைநிலையாமை, யாக்கைநிலையாமை என்பன காஞ்சித்திணைப் பாடல்களில் சங்ககாலத்திலேயே தமிழ்ச்சமூகம் கண்டிருக்கிறது. இங்கு சித்தர் பாடல்களில் அது மிகத் தீவிரம் கொள்கிறது.

- பெண்ணடிப் பிறப்பிலாமை என்றும் நல்க வேணுமே (சிவவாக்கியர் 238)
- நரகக்குழியும் இன்னும் நான் புசிப்பேன் என்குதே
  உரகப் படத்தல்குல் உனைக் கெடுப்பேன் என்குதே
  குரும்பை முலையும் குடிகெடுப்பேன் என்குதே
  அரும்பு விழியும் என்றன் ஆவி உண்பேன் என்குதே
  மாதர் உருக்கொண்டு மறலி வஞ்சம் எண்ணுதே

(பட்டினத்தார் - கண்ணிகள் 17-19 முடிய)

வெட்டுண்ட பொன்போல் விரிந்த அல்குல் பைதனிலே
தட்டுண்டு நிற்க தவிர்வதுவும் எக்காலம் (மெய்ஞானப் புலம்பல் கன்னி 11)

அவைதீகத் தமிழ்மரபு பெரிதும் போற்றிய காமத்துப்பால் சார் அழகுணர்ச்சி, இங்கு இப்படியான பாடல்களில் சிற்றின்பம் தவிர்த்துப் பேரின்ப நிலையெய்த அழுகிப் புழுத்து நாறும் உடல் என வைதீகக் காமமாக மறுதலிக்கப்படுவதை அவதானிக்கலாம். எத்தனை பேர் தொட்ட முலை எத்தனை பேர் விட்ட குழி எனப் பெண்ணுடல் கேவலமான அருவருப்பான சித்திரிப்புகள் கொண்டதென்பது, சனாதன மறுப்பும் வைதீக மறுப்பும் கொண்டு மிக முற்போக்கான இலக்கியமாக உயர் நிலையில் சித்திரிக்கப்பட்டுவந்த சித்தரிலக்கியம் பெண்ணிய உடலரசியல் எனும் நோக்கு நிலையில் மிகப் பிற்போக்கானதாகக் கீழிறங்குவதையும் சேர்த்தே நோக்கவெண்டும். ஒருவேளை சித்தரில் ஒரு பெண் கூட இல்லை என்பதாலா? ஏன் வாப்பா இல்லை ஒரு பெண் நபி? எனக் கேட்கும் ஹெச்.சி.ரசூல் கேள்வியைப் போல ஏன் சித்தர் மரபில் ஒரு பெண்சித்தர் கூட இல்லை என்பதை அழுத்தமாகக் கேட்கலாம். தவிரவும் களவு கற்பு காதல் காமம் எனவும் இன்பத்துப்பால் காமத்துப்பால் எனவும் வாழ்வை அனுபவித்த தமிழ் அகத்திணை அழகியல் இங்கு கணக்கில் கொள்ளப்படாமல், பிறப்பறுத்தல் எனும் தமிழ் மரபில் இல்லாத கருத்துரு இடை நுழைந்துள்ளதையும் நோக்கவேண்டும். பெண்ணுடல் கொண்டாடப்பட வேண்டியது. உலகத்தின் ஆக்ககரமான மறு உற்பத்திச் சக்தியின் உன்னதமது. எனவே எமது உடலைக் கொண்டாடுவோம் எனும் எதிர்ப்பரசியலை உடலரசியலை இன்றைய பெண்ணியம் மிகக் காத்திரமாக முன்வைக்கிறது எனக் கருத்துரைக்கிறார் வே.மு.பொதியவெற்பன். வைதீக மறுப்பைக் காத்திரமாக முன்வைத்தி சித்தரியம் அடுத்த பிறவியிலாவது பெண்ணாய்ப் பிறக்காமலிருக்க அருள்புரியவேண்டும் எனும் ஹீப்ருமொழிப் பிரார்த்தனைக்கு நிகரான குரல் கொண்டதாகவும் இருக்கிறது என்பதை விமர்சனரீதியாக எதிர்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது. எனினும் இந்த விமர்சன ரீதியிலான பார்வை கடந்து, இடைக்காலத்தே தமிழ்ச் சமூகத்தில் இடைபுகுந்த வைதீகப் பண்பாட்டுக்கு எதிராக, நாம் சங்ககாலத்தில் பேணிய அவைதீகப் பண்பாட்டின் தொடர்ச்சியைச் சித்தரியத்திலும் வள்ளலாரியத்திலும் கூர்மையாகவும் ஆக்ககரமாகவும் விளங்கியதைத் துலக்கமாகக் காணமுடியும் என்பது உறுதி.

**உசாத்துணை**:

1. சித்தர் பாடல்கள், (2012) இரா. திருமுருகன்,சாகித்ய அக்காடெமி, புதுதில்லி.
2. சித்தர்பாடல்கள் திரட்டும் உரையும், (1995) சிவ.கன்னியப்பன், முல்லைநிலையம், சென்னை.
3. சித்தர்கள் சித்தாந்தமும் சூபிசமும், (2004 ) செ.கணேசலிங்கன், குமரன்பதிப்பகம், சென்னை.
4. பட்டினத்தார் ஒரு பார்வை,( 2012 ) பழ.கருப்பையா, கிழக்கு பதிப்பகம், சென்னை.
5. ஒப்பியல் இலக்கியம், (1999) கைலாசபதி கலாநிதி, குமரன் பதிப்பகம், இலங்கை.
6. திருவருட்பா,(2021)கிருபானந்தவாரியார்(தொ.ர்)குகஸ்ரீவாரியார்பதிப்பகம்,சென்னை